## கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபை

## அநுராதபுர மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 11 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 11 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

(அ) மீளாய்வாண்டின் போது வாழ்வின் எழுச்சி திணைக்களத்தினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த 696 கல்வணய்ஸ் குழாய்களின் பெறுமதி ரூபா 770,571 இனை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் பட்டோலையில் காட்டப்பட்டிருக்காத காணிகளின் பெறுமதி ரூபா 180,000 ஆகும்.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------------

கூட்டுத்தொகை ரூபா 154,960,858 இற்கான 06 சொத்துக்கள்/ பொறுப்புக்கள்/ வருமான விடயங்கள் தொடர்பான உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்/ விரிவான பட்டோலை என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 6,349,495 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 885,858 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 கடை வாடகை

------------------------

மீளாய்வாண்டு இறுதியளவில் நிலுவை கடை வாடகை ரூபா 148,700 ஆக காணப்பட்டதுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கழிவுப் பொருள் அகற்றல் கட்டணம்

------------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(2) இன் பிரகாரம் நீண்ட காலமாக முன் கொண்டுவரப்பட்டு காணப்படும் ரூபா 600,000 இற்கான நிலுவை குப்பை வரியினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம்

--------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 129(2)(அ) இன் பிரகாரம் முதலாவது பட்டோலையில் காணப்படும் எழுத்து மூலம் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மீறல் தொடர்பாக நீதிவான் நீதிமன்று ஒன்றினால் அறவிடப்படும் அனைத்து தண்டப் பணத்தையும் இனங்கண்டு பிரதேச சபை நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும் நிலுவை நிதி மன்றத் தண்டப் பணம் ரூபா 2,803,260 தொகை தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது முறையான அங்கீகாரம் இன்றி 14 விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 4,861,930 இற்கான மீதிகளை கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

-------------------------------------------------

(அ) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து சபைக்கு மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த 696 கல்வணய்ஸ் குழாய்களில் இருந்து ரூபா 515,928 பெறுமதியான 466 கல்வணய்ஸ் குழாய்கள் காணாமல் போயுள்ளன. இது தொடர்பாக முறையான விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 141,835,000 என காட்டப்பட்டிருந்த போதிலும் அக் காணிகளின் உரிமையை உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்று நிருப இலக்கம் 03 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 1995 அக்டோபர் 06 திகதி இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்ததன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள மயானங்கள் தொடர்பாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் 2006 நவம்பர் 14 திகதிய இலக்கம் PL/07/01/53 கொண்ட உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்று நிருப இலக்கம் 9 இன் பிரேரணைகள் மற்றும் விதப்புரைகளை செயற்படுத்தியிருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்